பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 17 ஷவ்வால் - 1433 ஓகஸ்ட்- 2012

## ஸகாதுல் பித்ர் / ஸதகதுல் பித்ர்: கடமையும் நடைமுறையும்

நமழான் நம்மிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் இறுதித் தருணத்தை அடைந்திருக்கிறோம். இன்ஷா அல்லாஹ் இன்னும் ஒரு சில தினங்களில் நோன்புப் பெருநாள் நம்மை வந்தடையவிருக்கிறது. இத் தினங்களில் நாம் மேற்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கடமை இருக்கிறது. அதுதான் ஸகாதுல் பித்ர் அல்லது ஸதகதுல் பித்ர் எனப்படும் கட்டாய தர்மமாகும்.

**ஸகாதுல் பித்ர் / ஸதகதுல் பித்ர் என்றால் என்ன?**
புனித ரமழான் விடைபெற்றுச் செல்கையில் கொடுக்கப்படுகின்ற ஒரு கட்டாயமான தர்மமே ஸகாதுல் பித்ர் அல்லது ஸதகதுல் பித்ர் ஆகும்.

**நோக்கம் என்ன ?**
ஸகாதுல் பித்ர் கடமையாக்கப்பட்டதன் நோக்கம் நோன்பாளியை பரிசுத்தப்படுத்துவதும், ஏழைகளின் பசியைப் போக்குவதுமாகும். ஏழைகள் பெருநாள் தினத்தன்று ஏனையோரைப் போன்று உணவு உட்கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும். "தீய பேச்சு, தீய நடத்தை ஆகியவற்றிலிருந்து நோன்பாளியைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவும் ஏழைகளுக்கு உணவாகவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸகாதுல் பித்ரை கடமையாக்கினார்கள்" (அபூதாவூத், இப்னு மாஜஹ்)

**யார் கொடுக்க வேண்டும் ?**
பெருநாள் இரவிலும் பெருநாள் பகலிலும் தானும் தன் குடும்பத்தாரும் உண்ணுவதற்குப் போதுமான அளவை விட மேலதிகமாகப் பெற்றிருக்கின்ற ஒவ்வொரு குடும்பத் தலைவரும் இக் கடமையை நிறைவேற்ற வேண்டும். செல்வந்தர்கள் மட்டுமன்றி, மேற்குறிப்பிட்ட நிலையிலுள்ள அனைவரும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

**யாருக்காக கொடுக்க வேண்டும் ?**
ஒரு குடும்பத் தலைவர் தனக்காகவும் தன் குடும்பத்திலுள்ள மனைவி, பிள்ளைகள் உட்பட தன் செலவில் தங்கியிருப்போருக்காகவும் கொடுக்க வேண்டும்.

## பெருநாள் தொழுகைக்கான அழைப்பு

வழமை போன்று இவ்வருடமும் நபியவர்களின் வழக்கமான நடைமுறையை செயற்படுத்தும் பொருட்டு இன்ஷா அல்லாஹ் ஆற்றங்கரைத் திடலில் பெருநாள் தொழுகையை பெருநாளன்று காலை <u>6.30</u> மணிக்கு நிறைவேற்றுவதற்கு ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாடு செய்துள்ளது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் முஸல்லாவுடன் வுழூ செய்த நிலையில் உரிய நேரத்திற்கு வந்து பெருநாள் தொழுகையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். ('பெருநாள் தொழுகையில் நபிகளாரின் நடைமுறை' என்ற கட்டுரை உள்ளே இடம்பெறுகிறது)

அதாவது, பெருநாள் பிறை தோன்றும் போது யாரெல்லாம் உயிருடன் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்காகவும் ஸகாதுல் பித்ர் கொடுக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் ஒரு குழந்தை பெருநாள் பிறை தோன்றுவதற்கு சற்று முன் பிறந்திருந்தால் அக்குழந்தைக்காகவும், பிறை தோன்றும் போது ஒருவர் உயிருடன் இருந்து பிறை தோன்றிய பின் மரணித்து விட்டால் அவருக்காகவும் ஸகாதுல் பித்ர் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இருவருமே பிறை தோன்றும் நேரத்தில் உயிருடன் இருந்தார்கள்.

அதே வேளை பெருநாள் பிறை தோன்றிய பின்னர் ஒரு குழந்தை பிறந்தால் அல்லது பெருநாள் பிறை தோன்றுவதற்கு முன் ஒருவர் மரணித்து விட்டால் - இவ்விருவருக்காகவும் ஸகாதுல் பித்ர் கொடுக்க வேண்டிய கடமையில்லை. ஏனெனில் இவ்விருவருமே பெருநாள் பிறை தோன்றும் நேரத்தில் உயிருடன் இருக்கவில்லை. சுருக்கமாக கூறுவதாயின், ஒருவருக்காக ஸகாதுல் பித்ர் கொடுக்க வேண்டுமானால் அவர் பெருநாள் பிறை தோன்றும் போது உயிருடன் இருக்க வேண்டும்.

**யாருக்கு கொடுக்க வேண்டும் ?**
முஸ்லிம்களில் உள்ள ஏழைகளுக்கு மாத்திரம் கொடுக்கப்பட வேண்டும். ஸகாத் கொடுப்பது போன்று எட்டுக் கூட்டத்தாருக்கு கொடுப்பதில்லை. ஏனெனில் நபியவர்கள் மேலுள்ள ஹதீஸில் "ஏழைகளுக்கு உணவாக" என்று ஏழைகளை மாத்திரமே குறிப்பிடுகிறார்கள்.

**எதைக் கொடுக்க வேண்டும் ?**

பிரதான உணவாக உட்கொள்ளக் கூடிய உணவுப் பண்டத்தைக் கொடுக்க வேண்டும். நபியவர்களின் காலத்தில் பிரதான உணவாகக் காணப்பட்ட கோதுமை, பேரீத்தம்பழம், திராட்சை போன்ற இன்னும் சில உணவுப் பண்டங்கள் ஸகாதுல் பித்ராக வழங்கப்பட்டுள்ளன. அபூ ஸஈதினில் குத்ரீ றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கிறார்கள் : 'நபிகளாரின் காலத்தில் நாங்கள் உணவுப் பண்டங்களில் ஒரு ஸாஉ (நான்கு பிடி) ஸகாதுல் பித்ர் வழங்குபவர்களாக இருந்தோம். எங்களுடைய உணவாக பேரீத்தம்பழம், கோதுமை, திராட்சை, கிச்சடி ஆகியவை இருந்தன' (புஹாரி, முஸ்லிம்). அதாவது மேற்குறிப்பிட்ட உணவுப் பண்டங்கள் நபிகளாரின் காலத்தில் ஸகாதுல் பித்ராக வழங்கப்பட்டுள்ளன என்பது மேற்படி ஹதீஸிலிருந்து தெளிவாகிறது.

இவ்வகையில் நமது நாட்டில் பிரதான உணவுத் தானியமாகிய இருக்கும் அரிசியை ஸகாதுல் பித்ராக நாம் வழங்கலாம். நம்மில் அதிகமானர்கள் செய்வது போன்று சில்லறைகள் வழங்குவதோ, உடு துணிகள் வழங்குவதோ ஸகாதுல் பித்ராக அமையாது என்பதே ஹதீஸ்களின் அடிப்படையில் பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும். ஏனெனில் நபியவர்களின் காலத்தில் திர்ஹம், தீனார் போன்ற நாணயங்கள் இருந்த போதும் உணவுத் தானியத்தை வழங்குமாறுதான் நபிகளார் கட்டளையிட்டுள்ளார்கள்.

**அளவு என்ன ?**

நபியவர்களின் காலத்தில் ஒரு 'ஸாஉ' (நான்கு பிடி) ஸகாதுல் பித்ராக வழங்கப்பட்டது. இந்த அளவை தற்கால முறைக்கு மாற்றும் போது ஒரு குடும்பத் தலைவர் தனது குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் 2 கொத்து என்ற அளவுப்படி ஏழைகளுக்கு அரிசியை வழங்கவேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் ஐந்து பேர் இருக்கிறார்கள் எனில், ஒருவருக்கு 2 கொத்து என்ற வகையில் மொத்தம் 10 கொத்து அரிசியை ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.

**எப்போது கொடுக்க வேண்டும் ?**

நோன்புப் பெருநாளைக்கான பிறை பார்த்ததிலிருந்து அடுத்த நாள் பெருநாள் தொழுகைக்குச் செல்லுவதற்கு முன் இக்கடமை நிறைவேற்றப்பட வேண்டும்.

"நோன்புப் பெருநாள் தொழுகைக்கு முன் யார் இக்கடமையை நிறைவேற்றுகிறாரோ அவருக்கு அது அங்கீகரிக்கப்பட்ட ஸகாதுல் பித்ராக நிறைவேறும். நோன்புப் பெருநாள் தொழுகைக்குப் பின் யார் அதை நிறைவேற்றுகிறாரோ அது ஸதகாவாகவே கருதப்படும்" என்று நபியவர்கள் கூறினார்கள். (அபூதாவூத்)

நபியவர்களின் காலத்தில் ஸகாதுல் பித்ர் ஸகாத்தைப் போன்று கூட்டாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஸஹீஹுல் புஹாரியில் வரக்கூடிய ஒரு நீண்ட ஹதீஸில் அபூஹுரைரா றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கும் போது, "ஸகாதுல் பித்ர் பொருட்களை பாதுகாப்பதற்காக என்னை நபியவர்கள் பொறுப்பாக்கினார்கள்" என்று குறிப்பிடுகிறார்கள். ஸகாதுல் பித்ர் பொருட்கள் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு கூட்டாக நிறைவேற்றும் நோக்கில் வைக்கப்பட்டிருந்ததனால்தான் அவற்றை பாதுகாப்பதற்காக அபூஹுரைரா றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

மேலும் ஸஹாபாக்கள் நோன்புப் பெருநாளைக்கு ஒரு தினம் அல்லது இரு தினங்களுக்கு முன் தமது ஸகாதுல் பித்ரை வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்ட பொறுப்பாளரிடம் (ஆமிலிடம்) வழங்கியுள்ளார்கள் (புஹாரி, ஸஹீஹ் இப்னு ஹுஸைமா). எனவே, நபிகளாரின் காலத்தில் ஸகாதுல் பித்ர் பொருட்களை மக்களிடமிருந்து வசூலிப்பதற்காக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார், அவரிடம் தமது ஸகாதுல் பித்ர் பொருட்களை ஒப்படைத்திருக்கிறார்கள் என்று இந்த ஹதீஸில் விபரிக்கப்படுவதிலிருந்தும் ஸகாதுல் பித்ர் கூட்டாக நிறைவேற்றப்பட்டுள்ளமை தெரிகிறது. இவ்வாறு பொறுப்பாளரிடம் பெருநாளைக்கு ஒரு தினம் அல்லது இரு தினங்களுக்கு முன் ஸஹாபாக்களால் ஒப்படைக்கப்பட்ட ஸகாதுல் பித்ர் பொருட்கள் பெருநாள் பிறை பார்த்ததிலிருந்து மறுநாள் பெருநாள் தொழுகைக்கு செல்வதற்கு முன் ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (நூற்கள்: பத்ஹுல் பாரி, துஹ்பதுல் அஹ்வதீ - திர்மிதி என்ற ஹதீஸ் நூலின் விரிவுரை நூல்)

எனவே, ரமழான் பிரிந்து செல்கையில் நம்மை இறுதியாக ஒரு தடவை தூய்மைப்படுத்தி விடுவதற்காகவும் ஏழைகளும் பெருநாளில் மனநிறைவோடு உண்டு மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும் மார்க்கம் கடமையாக்கிய ஸகாதுல் பித்ர் என்ற இக்கட்டாய கடமையை தவறாது உரிய காலத்தில் உரிய முறைப்படி நிறைவேற்றி நமது நோன்புகளை பரிசுத்தப்படுத்திக் கொள்வோமாக.

**– இப்னு அப்திர் ரஸ்ஸாக் –**

## தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

ஏறாவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்திச் சபையினால் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களது நலன்கருதி நடாத்தப்பட்டு வருகின்ற மாதிரிப் பரீட்சையின் 2ம் கட்டப் பரீட்சை கடந்த 31.07.2012ல் மட்/மம/அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 தொடக்கம் முற்பகல் 11.00 மணிவரை நடாத்தி வைக்கப்பட்டது. பரீட்சை முடிவில் 1ம் கட்டப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 11 மாணவர்களுக்கான பரிசில்கள் அதிபர் ஏ.எம்.ஏ. ஜுனைத் தலைமையில் ஏறாவூர் கோட்டக் கல்வி அதிகாரி ஐ.எல்.இஸட். ஆப்தீன் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கான ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் கூறப்பட்டன.

**தகவல் ஏ.எம். றாஜீன் ஆசிரியர்**

# பெருநாள் தொழுகையில் நபிகளாரின் நடைமுறை

றமழான் மாதம் முடிவடைந்ததும் நம்மை வந்தடையவிருப்பது நோன்புப் பெருநாளாகும். இந்த சமூகத்திற்கு அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள இரு பெருநாள் தினங்களையும் நாம் மார்க்க நடைமுறைக்குட்பட்டு சந்தோஷமாக கொண்டாடும் அதே வேளை இப்பெருநாள் தினத்தில் நாம் நிறைவேற்றவேண்டிய முக்கிய கடமையாக அல்லாஹ் பெருநாள் தொழுகையை ஏற்படுத்தியுள்ளான்.

பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதில் நபியவர்களின் நடைமுறை என்னவெனில், பள்ளிவாசல்களில் இத்தொழுகையை நிறைவேற்றாமல் ஒரு பிரதேசத்திலுள்ள முஸ்லிமான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரும் ஒரு திடலில் அல்லது மைதானத்தில் ஒன்று கூடி இத்தொழுகையை நிறைவேற்றுவதாகும். பின்வரும் ஹதீஸ்கள் நபியவர்களும் ஸஹாபாக்களும் பெருநாள் தொழுகையை திறந்த மைதானத்தில்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதற்கு தெட்டத்தெளிவான சான்றுகளாக உள்ளன.

1. ‘நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் தினங்களில் மைதானத்திற்குச் சென்று பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவார்கள்’ (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், நஸாஈ)

2. ‘நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் தினங்களில் வயதிற்கு வந்த கன்னிப் பெண்களையும், மாதாந்த தீட்டுள்ள பெண்களையும் கூட பொது மைதானத்திற்கு வருமாறும் தீட்டுள்ள பெண்கள் தொழுகையில் ஈடுபடாமல் முஸ்லிம்களின் நலவுகளிலும் பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளுமாறும் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு கட்டளையிட்டார்கள்’ (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

3. ‘நபியவர்கள் பெருநாள் தினத்தில் திடலுக்கு செல்வார்கள். அத்திடலில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்பதனால் நபியவர்கள் செல்லும் போது அரை ஈட்டி அளவான தடி கொண்டுசெல்லப்பட்டு திடலிலே நாட்டப்படும். பின்னர் அத்தடியை தடுப்பாக (ஸுத்ரா) வைத்து அதை முன்னோக்கி நின்று தொழுகை நடத்துவார்கள்’ (புஹாரி, முஸ்லிம், அபூதாவூத்)

எனவே நபியவர்களின் வழக்கமான நடைமுறை பெருநாள் தொழுகையை மைதானத்தில் நிறைவேற்றுவதாகவே இருந்தது. நபியவர்கள் மதீனாவில் எந்த இடத்தில் பெருநாள் தொழுகைகளை நிறைவேற்றினார்கள் என்பதும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. மதீனாப் பள்ளிவாசலுக்கு கிழக்கே ஆயிரம் முழம் தொலைவிலுள்ள ஒரு திறந்த வெளியிலேயே நபியவர்களும் ஸஹாபாக்களும் தமது பெருநாள் தொழுகைகளை வழக்கமாக தொழுது வந்துள்ளார்கள் (நூற்கள்: ‘பத்ஹுல் பாரி’- பாகம்: 3, ‘அஹ்பாருல் மதீனா’ )

நபிகளார் கட்டிய மதீனா பள்ளிவாசல் எத்தனையோ சிறப்புகளையும் மகத்துவங்களையும் கொண்டதாகும். உலகிலுள்ள பள்ளிவாசல்களில் மக்கா பள்ளிவாசலுக்கு அடுத்த அந்தஸ்திலுள்ள பள்ளிவாசல் மதீனா பள்ளிவாசலாகும். ‘மதீனாவில் உள்ள மஸ்ஜிதுந் நபவி பள்ளிவாசலில் தொழப்படும் ஒரு தொழுகை மக்கா பள்ளிவாசலைத் தவிரவுள்ள ஏனைய பள்ளிவாசல்களில் தொழப்படும் ஆயிரம் தொழுகைகளை விட சிறந்தது’ என்று நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாப் பள்ளிவாசலின் மகத்துவம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் (ஆதாரம் : திர்மிதி, இப்னு மாஜா). அவ்வாறிருந்தும் கூட நபிகளார் அவர்கள் அத்தனை சிறப்புகள் வாய்ந்த மதீனாப் பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றாமல் அனைத்து முஸ்லிமான ஆண்களையும், பெண்களையும் மைதானத்திற்கு வந்து பெருநாள் தொழுகையில் கலந்து கொள்ளுமாறு கட்டளையிட்டதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

அன்றைய காலத்தில் மதீனாப் பள்ளிவாசலில் இடப் பற்றாக்குறை காரணமாகத்தான் நபியவர்கள் இவ்வாறு மைதானத்தில் தொழுமாறு கட்டளையிட்டார்கள் என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் நபியவர்களின் காலத்திலேயே மதீனாவில் பல பள்ளிவாசல்கள் இருந்தன. மஸ்ஜிதுந் நபவி, மஸ்ஜிதுல் பத்ஹ், மஸ்ஜிது குபா, மஸ்ஜிது பனீகுறைழா, மஸ்ஜிதுல் பழீஹ், மஸ்ஜிதுல் கிப்லதைன் போன்ற இன்னும் பல பள்ளிவாசல்கள் இருந்தன. (நூல் : பத்ஹுல் பாரி - ஸஹீஹுல் புஹாரியின் விரிவுரை நூல், 1ம் பாகம்). மதீனாப் பள்ளிவாசலில் இடம் போதாமலிருந்தால் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய பள்ளிவாசல்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுமாறு மக்களுக்கு கூறியிருக்க முடியும். ஆனால் நபியவர்கள் அவ்வாறு கூறாமல் மைதானத்திற்கு வருமாறுதான் அனைவருக்கும் கட்டளையிட்டார்கள்.

இடப்பற்றாக்குறையினால்தான் மைதானத்திற்கு வருமாறு நபியவர்கள் கட்டளையிட்டார்கள் என்று கூறுவோர் இன்றைய முஸ்லிம்களைப் போன்று ஸஹாபாக்களையும் கருதுகிறார்கள் போலிருக்கிறது. ஏனெனில் இன்றைய முஸ்லிம்களில்தான் ஐவேளை தொழதாவர்கள், பெருநாள் தொழுகை மாத்திரம் தொழுபவர்கள், ஜும்ஆ தொழுகை மாத்திரம் தொழுபவர்கள் அதிகம் பேர் இருக்கின்றனர். ஆனால் ஸஹாபாக்களில் யாரும் இவ்வாறு இருக்கவில்லை. அனைத்து ஸஹாபாக்களும் அனைத்துத் தொழுகைகளிலும் பேணுதலுடையவர்களாகவும் அனைத்துத் தொழுகைகளையும் பள்ளிவாசலுக்கு சென்று நிறைவேற்றுபவர்களாகவுமே இருந்தார்கள். ஸஹாபிப் பெண்மணிகள் கூட, ஏன் முஸ்லிம்களாக நடித்து வாழ்ந்த முனாபிக்குகள் கூட, நபிகளாரின் காலத்தில் தொழுகைக்கு பள்ளிவாசலுக்கு சென்றிருக்கிறார்கள் என்றால் ஐவேளைத் தொழுகைக்கு - ஆகக் குறைந்தபட்சம் ஜும்ஆத் தொழுகைக்கேனும் இதே இடப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐவேளைத் தொழுகைக்கோ அல்லது ஜும்ஆத் தொழுகைக்கோ இடப்பற்றாக்குறை ஏற்பட்டதாகவோ, இடம் போதவில்லை என்பதற்காக நபியவர்கள் ஸஹாபாக்களை அழைத்துக்கொண்டு மைதானத்திற்கு சென்றதாகவோ வரலாற்றில் எங்கும் காட்ட முடியாது. எனவே, இடப் பற்றாக்குறை என்ற வாதம் மிகப் பிழையான வாதம் என்பது தெளிவாகிறது.

எனவே, பெருநாள் தொழுகையானது, ஒரு பிரதேசத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒரு பொது மைதானத்தில் ஒன்று கூடி நிறைவேற்ற வேண்டிய ஒரு விசேடமான தொழுகை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறு ஒரு பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் பெருநாள் தினத்தில் ஓரிடத்தில் ஒன்றுகூடி, அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, ஒருவருக்கொருவர் ஸலாம் கூறி தமது மகிழ்ச்சியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே நபியவர்களின் நோக்கமாக இருந்திருக்கிறது.

எனவே கடந்த வருடங்கள் போன்று இன்ஷா அல்லாஹ் இவ்வருடமும் பெருநாள் தொழுகையை ஒரு மைதானத்தில் ஒன்று கூடி நிறைவேற்றுவோம். அதன் மூலம் மறக்கடிக்கப்பட்டுள்ள நபியவர்களின் நடைமுறையை உயிர்ப்பிப்போம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையில் நம் அனைவரையும் ஒன்றுபடுத்துவானாக. அவனது மார்க்கத்தை சரியாகப் பின்பற்றும் பாக்கியத்தை அனைவருக்கும் தந்தருள்வானாக.

## பெருநாள் காலங்களில் செய்ய வேண்டியவை

பெருநாள் தினங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்குரிய தினங்களாகும். ஒரு முஸ்லிம் தானும் மகிழ்ச்சியாக இருப்பதோடு, பிறரையும் மகிழ்ச்சிப்படுத்துவது இஸ்லாம் வரவேற்கும் ஒரு செயலாகும். ஆயினும் எந்த மகிழ்ச்சியும் இஸ்லாமிய வரையறைக்குட்பட்டிருக்க வேண்டும். மார்க்கம் விதித்துள்ள பின்வரும் செயல்கள் நமக்கு மகிழ்ச்சியை தருவதோடு, பிறரையும் மகிழ்ச்சிப்படுத்துபவையாகும்.

**1. உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்கு செல்லல்**

உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளுக்கு சென்று உறவைப் புதுப்பித்துக்கொள்வது இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்ட ஒரு கடமையாகும். நபியவர்கள் கூறினார்கள்: 'யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டிருக்கிறாரோ அவர் தனது உறவினரோடு சேர்ந்து கொள்ளவும்' (புஹாரி, முஸ்லிம்). உறவினரை சேர்ந்து நடப்பதில்தான் ஆயுள் விருத்தயும் உணவு விருத்தியும் தங்கியுள்ளன. நபியவர்கள் கூறினார்கள்: 'தனது உணவில் விருத்தியும் ஆயுள் விருத்தியும் ஏற்பட வேண்டுமென்று யார் விரும்புகிறாரோ அவர் தனது உறவினரை சேர்ந்து நடக்கவும்' (புஹாரி, முஸ்லிம்).

முக்கியமாக உறவினர்கள் தன்னை வெறுத்து ஒதுக்கினாலும் அவர்களோடு ஒற்றுமையாகி இணைந்து கொள்ளுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது. நபியவர்கள் கூறினார்கள்: 'உறவினர் சேர்ந்து நடக்கும் போது அவர்களோடு சேர்ந்து நடப்பவர் உண்மையில் உறவினரைச் சேர்பவரல்ல. உறவினர் உறவை துண்டித்து நடக்கும் போது அவருடன் சேர்ந்து நடப்பவரே உண்மையில் உறவினரை சேர்ந்து நடப்பவராவார்' (புஹாரி)
'உறவை துண்டித்து வாழ்பவரோடும் நீ சேர்ந்து நடந்துகொள்' என்றும் நபியவர்கள் கூறினார்கள் (அஹ்மத்)

**2. ஸதகா செய்தல்**

பெருநாள் தினத்தில் நபியவர்கள் செய்த முக்கியமான ஒரு அமல் அதிகமாக ஸதகா செய்வதாகும். ஸதகா செய்வதன் மூலம்தான் நமது செல்வம், பொருளாதாரத்தில் விருத்தி ஏற்படுவதோடு நமக்கு வரவிருக்கும் கஷ்டங்கள், துன்பங்களும் நீக்கப்படுகின்றன. நபியவர்கள் கூறினார்கள்: 'ஒவ்வொரு நாள் காலையிலும் இரு வானவர்கள் பூமிக்கு இறங்கி வருகிறார்கள். அவர்களில் ஒருவர், 'யா அல்லாஹ்! யார் உன் வழியில் செலவுசெய்கிறார்களோ அவர்களுக்கு பிரதியீடாக பொருளாதார வளர்ச்சியை கொடுப்பாயாக' என்று பிரார்த்திக்கிறார். அடுத்த வானவர் 'யா அல்லாஹ்! யார் செலவுசெய்யாமல் தடுத்துக்கொள்கிறாரோ அவருக்கு பொருளாதாரத்தில் அழிவைக் கொடுத்து விடுவாயாக' என்று பிரார்த்திக்கிறார்' (புஹாரி, முஸ்லிம்)

**3. அதிகமாக ஸலாம் கூறுதலும் வாழ்த்துக் கூறி பிரார்த்தித்தலும்**

பெருநாளில் நாம் சந்திக்கும் அனைவருக்கும் ஸலாம் கூறிக்கொள்ள வேண்டும். அதன் மூலம் மனச் சஞ்சலங்கள் நீங்கி ஒற்றுமையும் நேசமும் உண்டாகும். தெரிந்தவர்களுக்கு மட்டுமல்ல, தெரியாதவர்களுக்கும் ஸலாம் கூறுமாறு இஸ்லாம் வேண்டுகிறது. ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து இஸ்லாத்தில் மிகவும் சிறந்த அமல் எது? என கேட்ட போது நபியவர்கள் 'உணவளிப்பதும் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவருக்கும் ஸலாம் கூறுவதுமாகும்' என பதிலளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

இதே வேளை பெருநாள் தினங்களில் ஸஹாபாக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது "தகப்பலல்லாஹுமின்னா வமின்கும் " என்று கூறிக்கொள்வார்கள் (பைஹகீ). எனவே பெருநாள் தினத்தில் சந்திக்கும் அனைவருக்கும் ஸலாம் கூறுவதோடு இந்த வாசகத்தை கூறி பிரார்த்திக்கொள்வது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

## பெருநாள் காலங்களில் தவிர்க்க வேண்டியவை

அல்லாஹ் நமக்கு அருட்கொடையாக வழங்கிய பெருநாளை மகிழ்ச்சியாக கொண்டாடும் வேளை, இஸ்லாம் வகுத்த வரையறைகளுக்குட்பட்டு நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது அவசியமாகும். மாற்று மதத்தவர் போன்று வரையறைகளையெல்லாம் மீறி பெருநாள் தினங்களை நாம் கழிப்போமாயின், அல்லாஹ்வின் அருளிலிருந்து நாம் தூரப்படுத்தப்படுவோம் என்பதை மறந்துவிடக் கூடாது. இஸ்லாம் தடைசெய்த பின்வரும் அம்சங்கள் நமது பெருநாள் கொண்டாட்டத்தின் போது இடம்பெற்று விடாமல் நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**1. போதைவஸ்துப் பாவனை**

போதைவஸ்துப் பாவனை இஸ்லாம் ஹராமாக்கிய பெரும் பாவச் செயல்களில் ஒன்றாகும். பாவங்களின் தாய் என்று இஸ்லாத்தில் வர்ணிக்கப்பட்ட மதுபானம், கஞ்சா போன்ற போதைவஸ்துப் பொருட்களை ஒரு முஸ்லிம் எக்காலமும் தவிர்க்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் கூறுகிறான்: 'விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும் சூதாட்டமும் (வணக்கத்திற்காக) நடப்பட்ட சிலைகளும் குறிபார்க்கும் (சூதாட்ட) அம்புகளும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க செயல்களாகும். ஆகவே, இவைகளைத் தவிர்ந்து கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றிபெறுவீர்கள்' (5:90)

நபியவர்கள் கூறினார்கள்: 'யார் மதுபானம் அருந்துகிறாரோ அவருடைய நாற்பது நாள் காலைத் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மதுபானம் அருந்திய நிலையில் ஒருவர் மரணித்துவிட்டால் அவர் நுழையுமிடம் நரகமாகும். அவர் பாவ மன்னிப்புக் கோரினால் அல்லாஹ் மன்னிப்பான்' (திர்மிதி, இப்னு மாஜஹ்). 'மதுபானம் அருந்தும் போது ஒருவர் ஈமானுடன் இருக்கமாட்டார்' என்றும் நபியவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மாற்று மதத்தவர்களே நம்மிடம் வந்து முறைப்பாடு செய்யும் அளவுக்கு நமது இளைஞர்களின் மதுப் பாவனை அண்மைக்காலமாக அதிகரித்து வருவது உண்மையில் நமக்கு மிகப் பெரும் கவலையையும் இழிவையும் தேடித் தருவதாக அமைந்துள்ளது. இஸ்லாத்தின் இனிய தூதைச் சுமந்து சென்று மதுபானம் அருந்துவதும் போதைவஸ்துக்களைப் பாவிப்பதும் மனித வாழ்வை நாசமாக்கக் கூடியவை என்று பிரசாரம் செய்ய வேண்டிய முஸ்லிம் சமூகத்தின் முதுகெலும்புகளான இளைஞர்கள் பலர் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகிப் போனமை மிகப் பெரும் துரதிர்ஷ்டமாகும்.

இவ்வாறே புகைத்தலும் மார்க்கம் ஹராமாக்கிய ஒரு பாவச் செயலாகும். அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் கரங்களை அழிவை நோக்கி நீட்டாதீர்கள். நபியவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிம் தனக்கு தான் தீங்கு செய்வதோ, பிறருக்கு தீங்கு செய்வதோ கூடாது. புகைத்தல் மனித உடலுக்கு பெரும் கேட்டை உண்டாக்குவதாக மருத்துவ ஆய்வுகள் நிரூபித்துள்ளன. புகைத்தலானது உயிர்கொல்லி நோயான புற்றுநோயை உண்டாக்குவதாக அரசாங்கமே எச்சரித்துள்ளது. தனது உடலுக்கு தானே தீங்கிழைத்துக் கொள்வது தற்கொலைக்கு ஒப்பான, இஸ்லாம் ஹராமாக்கிய ஒரு செயல் என்பதில் சற்றும் ஐயமில்லை.

### 2. சினிமா படங்கள் பார்த்தல்

தீய உணர்வுகளைத் தூண்டி, மனிதனை போலித்தனமான கற்பனைகளில் மிதக்க வைப்பதோடு, பல்வேறு மோசமான பண்பாட்டுச் சீரழிவுகளுக்கு இட்டுச் செல்லக் கூடியவையே சினிமாப் படங்களாகும். பலதரப்பட்ட பாவச் செயல்களுக்கும் பாரிய ஒழுக்க வீழ்ச்சிக்கும் பிரதான காரணமாக இருக்கும் சினிமாப் படங்களைப் பார்ப்பதை ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் தவிர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆபாசமான காட்சிகளை பார்ப்பதை இஸ்லாம் எல்லாக் காலமும் ஹராமாக்கியுள்ளது. எனவே பெருநாள் காலங்களில் சினிமாப் படங்களைப் பார்த்து பொன்னான நேரங்களை பாழாக்கிவிடாமல் பயனுள்ள காரியங்களில் ஈடுபடுவது அவசியமாகும்.

இன்றைய சினிமா படங்களினால்தான் இளைஞர், யுவதிகளின் உள்ளங்களில் தவறான சிந்தனைகளும் ஆபாச உணர்வுகளும் விதைக்கப்பட்டுள்ளன. ஆண், பெண் ஒழுக்க வீழ்ச்சிக்கு மிகப் பெரும் காரணமாக இருப்பவை சினிமாப் படங்களேயாகும். பெரும்பாலான இளைஞர்களும் யுவதிகளும் மார்க்க சிந்தனையோ, மார்க்க கடமைகளில் ஈடுபாடோ அற்று இருப்பதற்கும் சினிமாப் படங்களே காரணமாய் அமைந்திருக்கின்றன.

இம்மைக்கோ, மறுமைக்கோ எந்தப் பயனும் தராத சினிமாப் படங்கள் பார்ப்பதை தவிர்த்து, மார்க்க ரீதியான, அறிவு ரீதியான இறுவட்டுகள் (சீடிகள்) நிறைவாக கிடைக்கும் இன்றைய சூழ்நிலையில் அவற்றைப் பார்த்து மார்க்க ரீதியான அறிவையும் உயர்ந்த ஒழுக்க பண்பாட்டு விருத்தியையும் வளர்த்துக்கொள்ள பெருநாள் காலங்களில் அனைவரும் திட உறுதி கொள்வோமாக.

### 3. தொழுகைகளை பாழாக்குதல்

தொழுகைகளை உரிய நேரத்தில் தொழாமல் பிற்படுத்தல், தொழுகையில் சோம்பேறித்தனம் காட்டுதல், சில தொழுகைகளை தொழாமல் பாழாக்குதல் ஆகியன பெருநாள் காலங்களில் அதிகமான ஆண்களும் பெண்களும் விடும் தவறுகளாகும். இத்தவறுகள் நயவஞ்சகர்களான முனாபிக்குகளின் பண்புகள் என அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான். தொழுகை மு.்.மின்களின் மீது நேரம் குறிக்கப்பட்ட வணக்கமாகும் என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் தொழுகைகளை அவற்றின் உரிய நேரத்தில் நிறைவேற்றுவதாகும் என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

நோன்பு காலங்களில் தொழுகையை தவறாது உரிய நேரத்தில் பேணுதலோடு ஜமாஅத்தாக தொழுதவர்கள் கூட பெருநாள் காலம் வந்துவிட்டால் தொழுகைகளை பாழாக்குகிறார்கள். றமழானில் பெற்ற தொழுகைப் பயிற்சியை முற்றாக புறக்கணித்து விடுகிறார்கள்.

உண்மையான மு.்.மின்களாக நாம் நின்றுநிலைக்க வேண்டுமாயின், இறையச்சமுள்ள அடியார்களாக நாம் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின், ஒவ்வொரு தொழுகையையும் உரிய நேரத்தில் ஜமாஅத்தாக தொழுதுவிடுகின்ற றமழான் தந்த பயிற்சியை றமழான் கடந்துசென்ற பின்பும் தொடரவேண்டும்.

## பட்டாசு கொழுத்தாதீர்கள்! அது ஷைத்தானின் செயல்

பெருநாள் காலம் வந்துவிட்டால் பட்டாசு கொழுத்துதல் என்ற ஷைத்தானின் செயலில் பல இளைஞர்களும் சிறுவர்களும் ஈடுபடுகிறார்கள். பட்டாசு கொழுத்துதல் என்பது எந்தப் பயனுமற்ற, பிறருக்கு தீங்கை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயலாகும். இதன் மூலம் குழந்தைகளையும் வயோதிபர்களையும் நோயாளிகளையும் மிகப் பெரும் தொந்தரவுக்குள்ளாக்குகின்றோம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களாக. ஏனைய மனிதர்களின் மனங்களைப் புண்படுத்துவது இஸ்லாத்தில் பெரும் குற்றமாகும். 'தனது நாவாலோ, கரத்தாலோ பிற முஸ்லிம்களுக்கு தொந்தரவுகொடுக்காதவனே உண்மை முஸ்லிம் ஆவான்' என நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

பட்டாசு வெடிகளை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஷைத்தானின் மோசமான ஒரு செயல் நடைபெறுவதற்கு காரணமாக இருக்கிறோம் என்பதை கருத்தில் கொண்டு பட்டாசு வியாபாரத்தை நிறுத்திக்கொண்டால் அல்லாஹ்வின் அருள் அவர்களின் வியாபாரத்தில் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

# மனித அவலத்திற்குள்ளாகியிருக்கும் மியன்மார் நாட்டு முஸ்லிம்கள்

மியன்மார் என்று அழைக்கப்படும் பர்மா நாட்டில் வாழும் ரோஹிங்யா இன முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டு ஆட்சியாளர்களாலும் பௌத்த பிக்குகளாலும் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளினால் அந்நாட்டு முஸ்லிம்கள் மிகப் பெரும் அவலத்திற்கு உட்பட்டுள்ளனர்.

மிகக் குறுகிய காலத்தில் சுமார் 30,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் - பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி கொலைசெய்யப்பட்டுள்ளனர். இத்தனை பெரிய மனித அவலம் மியன்மாரில் நடைபெற்றும் கூட சர்வதேச செய்தி ஊடகங்கள் இது பற்றிய செய்திகளை பெரிதுபடுத்தியதாகத் தெரியவில்லை. சர்வாதிகாரப் போக்குடன் கூடிய இராணுவ ஆட்சி மியன்மாரில் தொடர்வதால் மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் கொடுமைகளின் உண்மைத்தன்மையை அறிய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மார் நாட்டின் மேற்கு மாகாணமான அரகானில் வாழும் ரோஹிங்யா எனப்படும் முஸ்லிம்களே அந்நாட்டு ஆட்சியாளர்களினாலும் பௌத்த பிக்குகளினாலும் இனச் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பல நூற்றாண்டுகளாக மியன்மாரில் வாழ்ந்து வரும் ரோஹிங்யா முஸ்லிம்களை அந்நாட்டு அரசாங்கம் தனது நாட்டுப் பிரஜைகளாகக் கூட அங்கீகரிக்கவில்லை. அவர்களை வெளிநாட்டவர்கள் என்றே கருதி வருகிறது. இதனால் இம் முஸ்லிம்களுக்கு கல்வி, அரச தொழில் உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் பல்லாண்டுகளாக மறுக்கப்பட்டே வருகின்றன. கூலித் தொழில் போன்ற அடிமட்ட தொழில்களைச் செய்வதற்கே அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இம்முஸ்லிம்களின் சொத்துகள், நிலங்கள் என்பன பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படுகின்றன. தேசிய அடையாள அட்டை கூட வழங்கப்படாத நிலையிலேயே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அரசாங்கம் மாத்திரமன்றி அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவியும் சமாதான நோபெல் பரிசு பெற்றவரும் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களுக்கு ஆதரவாக செயற்படுவார் என எதிர்பார்க்கப்பட்டவருமான ஆங் சான் சூச்சி அண்மையில் வெளிநாட்டு செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய பேட்டியின் போது "ரோஹிங்யா முஸ்லிம்கள் மியன்மார் பிரஜைகள்தானா? " என்று சந்தேகம் எழுப்பியிருந்தார். மொத்தத்தில் மியன்மார் அரசும் எதிர்க்கட்சிகளும் திட்டமிட்டே முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலைகளை அரங்கேற்றிவருவதாக எண்ணத் தோன்றுகிறது.

தற்போது மாத்திரமன்றி முற்காலங்களிலும் மியன்மார் முஸ்லிம்கள் படுகொலைகளுக்கும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். 1978ம் ஆண்டு நடைபெற்ற இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையின் போது பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் தமது சொந்த நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்கு செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தற்போது துன்பத்திற்குள்ளாகியிருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்களில் பலர் கடல் வழியாக அயலிலுள்ள பங்களாதேஷ், மலேஷியா ஆகிய நாடுகளுக்கு அகதிகளாகத் தப்பிச் செல்கின்றனர். ஆயினும் பங்களாதேஷ் அரசு தமது நாட்டு எல்லையில் இராணுவத்தினரைக் குவித்து வைத்து தனது நாட்டுக்குள் கால்பதிக்க விடாமல் இம்முஸ்லிம்களை விரட்டி வருகிறது. இதனால் இம்முஸ்லிம்கள் தமது நாட்டுக்கும் செல்ல முடியாமல் அயல்நாடுகளுக்கும் செல்ல முடியாமல் மிகப் பெரும் தவிப்புக்கும் துயரத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் விளைவாக 30,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதோடு முஸ்லிம்களுக்குச் சொந்தமான இலட்சக்கணக்கான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பல பள்ளிவாயல்கள் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

மனித உரிமை பற்றி குரலெழுப்பும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் மியன்மார் முஸ்லிம்கள் அனுபவித்து வரும் சொல்லொணாத் துயரங்களுக்கு எதிராக மியன்மார் நாட்டு அரசாங்கத்திடம் எந்தவொரு கருத்தையும் கூறாமலிருப்பது அந்நாடுகளின் முஸ்லிம் விரோதப் போக்கையே படம்பிடித்துக்காட்டுகிறது. ஆப்கானிஸ்தான், இராக் போன்ற முஸ்லிம் நாடுகளில் தமது இராணுவத்தைக் கொண்டு போய்க் குவித்து முஸ்லிம்களை கருவறுக்கும் செயற்பாட்டில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வரும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மியன்மார் முஸ்லிம்களுக்கு ஆதரவாக குலர்கொடுக்காமலிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

மு∴மின்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற அல்குர்ஆனிய வசனத்திற்கேற்பவும் ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரன் என்ற நபிமொழிக்கேற்பவும் முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கமாகிய மியன்மார் முஸ்லிம்களுக்காக நமது தொழுகைகளுக்கு பின்னரும் ஏனைய வேளைகளிலும் உணர்வுபூர்வமாக பிரார்த்திப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

## ஆறு நோன்புகளின் மகிமை

நோன்புப் பெருநாளை அடுத்து வரும் ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகள் நோற்பது மிகவும் முக்கியமான ஸுன்னத்தான அமலாகும். அதற்கு அதிகமான நற்கூலிகள் அல்லாஹ்விடம் காத்திருக்கின்றன. நபியவர்கள் கூறினார்கள்: 'யார் ரமழான் மாதம் நோன்பு நோற்று அடுத்து வரும் ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்புகள் நோற்கிறாரோ அவர் அவ்வருடம் முழுவதும் நோன்பு நோற்றவரைப் போலாவார்' (முஸ்லிம், திர்மிதி).

ஆறு நோன்புகளைத் தொடராகத்தான் நோற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஷவ்வால் மாதத்தில் வருகின்ற ஏதாவது ஆறு நாட்களில் இந்த நோன்புகளை நோற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் நபியவர்கள் கூறினார்கள்: 'யார் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றாரோ அது பத்து மாதம் நோன்பு நோற்றதற்கு சமமானதாகும். நோன்பு பெருநாளின் பின் ஆறு நோன்புகள் நோற்பது ஒரு வருட நோன்பின் பூர்த்தியாகும்' (முஸ்னத் அஹ்மத்). இது ஆதாரபூர்வமான ஹதீஸாகும். இந்த ஹதீஸில் ரமழானைத் தொடர்ந்து தொடராக நோற்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே வசதியுள்ளோர் தொடராகவும் நோற்க முடியும். அல்லது அந்த ஆறு நோன்புகளையும் ஷவ்வால் மாதம் முடிவடைவதற்குள் நோற்கவும் முடியும்.

ஆறு நோன்புகள் நோற்பது வயதானவர்களுக்கு மாத்திரம் உரியது போன்று பலரால் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுகிறது. அவ்வாறின்றி சக்தியுள்ள, வாய்ப்பு வசதிகள் உள்ள அனைவரும் ஆறு நோன்புகளை நோற்று வருடம் முழுவதும் நோன்பு நோற்ற நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

# மாதம் ஒரு துஆ

**தலைப்பிறையைக் காணும் போது ...**

اللَّهُمَّ أَهِلَّهُ عَلَيْنَا بِالْيُمْنِ وَالإِيمَانِ ، وَالسَّلامَةِ وَالإِسْلام ، رَبِّي وَرَبُّكَ اللَّهُ

**அல்லாஹு'ம்ம அஹில்லஹு' அலைனா பில் யும்னி வல் ஈமானி வஸ் ஸலாமதி வல் இஸ்லாமி றப்பீ வறப்புகல்லாஹ்**

**பொருள்:** யா அல்லாஹ், இப்பிறையை மகிழ்ச்சியோடும் இறை விசுவாசத்தோடும் அமைதியோடும் உனக்கு அடிபணிதலோடும் எங்களுக்காக தோன்றச் செய்வாயாக. எனது இறைவனும் (பிறையே) உனது இறைவனும் அல்லாஹ்வே ஆவான். (திர்மிதி, முஸ்னத் அபீ ய.்.லா)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு சில ஆலோசனைகள்

இம்மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர் ஏ.எம். றாஜீன் அவர்களால் வழங்கப்படும் ஆலோசனைகள் :

1. அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! நீங்கள் இப்பரீட்சையில் அல்லாஹ்வின் நாட்டங்கொண்டு சித்தியடைவது நிச்சயமான உண்மை.
2. நீங்கள் இற்றைவரை ஆசிரியர்களின் உதவியால் பாடசாலை முழுப்பாடத்தையும் கற்றுத் தெளிவடைந்து விட்டீர்கள்.
3. சகல பாட விடயங்களும் மனதில் பதியும் வண்ணம் போதிக்கப்பட்டு பல தடவைகள் மீட்கப்பட்டு நன்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளீர்கள்.
4. பரந்த நுண்ணறிவுப் பரப்பில் சிறுவர்களாகிய உங்களுக்கு உகந்த முறையில் தயாரிக்கப்பட்ட முன்னோடிப் பரீட்சைகள் பலவற்றை செய்து பயிற்றப்பட்டுள்ளீர்கள்.
5. அத்துடன் கடந்த கால அரச பரீட்சை வினாத்தாள்களுக்கு விடையளித்து, சந்தேகங்களைத் தீர்த்து, தெளிவு பெற்றுள்ளீர்கள்.

இவ்வளவு கடின பயிற்சிகளை செய்து பெருமுயற்சி செய்த நீங்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் இன்ஷா அல்லாஹ் சித்தியடைவது சாத்தியமானது என்ற உறுதியான எண்ணத்துடன், வினாக்களில் கேட்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய விடையளியுங்கள்.

அதாவது கீறிட்ட இடத்தில் நிரப்புங்கள் என்று கேட்கப்பட்டால் கீறிட்ட இடத்தில் தெளிவாக எழுதுங்கள். சரியான விடையின் கீழ் கீறிடுங்கள் என்று கேட்கப்பட்டால் சரியான விடையின் கீழ் கீறிடுங்கள். அவ்விடத்தில் எழுதவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு எழுதுவதால் வினாத்தாள் திருத்துபவர்களின் சினத்துக்குள்ளாவதுடன் உங்கள் நேரத்தையும் விரயம் செய்கின்றீர்கள்.

பரீட்சைத் தாளில் அவதான ஆற்றல் மிக முக்கியமான இடம் வகிப்பதால் அவ்விடயங்களை மிக ஆறுதலாகவும், அவதானமாகவும் அவதானித்து சரியான விடைக்கு விடையளியுங்கள். ஏனெனில் இங்கு பல விடைகள் சரிபோல் தோன்றும், ஆயினும் ஒரே ஒரு விடையே மிகச் சரியாக இருக்கும். அவற்றைத் தெரிவு செய்து விடையளியுங்கள்.

கண்டிப்பாக, எல்லா வினாக்களுக்கும் விடை அளியுங்கள். விடையளியாது விட்டுவிடாதீர்கள். சில விடைகளில் இரு விடைகள் சரிபோல் தோன்றுவதால் எதைத் தெரிவு செய்வது என்ற மயக்க நிலை தோன்றலாம். அவ்வேளை உங்கள் மனதுக்கு தோன்றும் விடையைத் தெரிவு செய்யுங்கள்.

வினாத்தாள் I, 16 தலைப்புக்களினூடாகவே தங்களது பொது விவேகம் ஆய்வு செய்யப்படுகின்றது. அதுபோல வினாத்தாள் II பாடசாலையில் கற்ற சகல பாடப் பரப்பையும் கொண்ட வினாக்களாக அமைந்திருக்கும்.

பரீட்சை தினத்தன்று சுப்ஹ் தொழுகையைத் தொழுதுவிட்டு அல்லாஹ்விடம் துஆ செய்துவிட்டு, காலைக் கடன்களை முடித்துவிட்டு, பரீட்சை உபகரணங்களுடன் சஞ்சலமற்ற மனதுடன் பொறுப்பாசிரியர்கள் மூலமாக மண்டபத்திற்கு சென்று வசதியாக அமர்ந்து கொள்ளுங்கள்.

பரீட்சை வினாத்தாளில் தெளிவாக சுட்டெண்ணை எழுதிவிட்டு வினாத்தாளை நன்கு வாசித்து கிரகித்து விடையளியுங்கள். நேரம் முடியும் மட்டும் பயிற்சிகளை திரும்பத் திரும்ப செய்து சரி பாருங்கள். இடைவேளை நேரத்தில் நடந்த வினாத்தாள் I பற்றி எதுவும் பேசாமல் அவசரமாக சிற்றுண்டிகளை உண்டுவிட்டு பரீட்சை எழுதும் இடத்திற்குச் சென்று அமர்ந்து வினாத்தாள் II ற்கு விடையளிக்க தயாராகுங்கள். அதனையும் நல்ல முறையில் செய்து முடித்து ஆசிரியரை சந்தியுங்கள். பெறுபேறு கிடைத்ததும் அல்லாஹ்வுக்கும், கற்பித்த ஆசிரியருக்கும் நன்றி கூறுங்கள்.


CGS

இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?

சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

இன்றே அழையுங்கள் 0772300420

ஏறாவூரில்

COMPUTERS & REPAIRING



மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள

யூரோ போன் வேர்ல்ட்

இல.17, பிரதான வீதி, ஏறாவூர்

Fax: 065 2240283

டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மற்றும் மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

# பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. ஸகாதுல் பித்ர் விதியாக்கப்பட்டதன் நோக்கம் யாது?
2. பெருநாள் தொழுகைகளை வழக்கமாக நபியவர்களும் ஸஹாபாக்களும் எங்கு நிறைவேற்றுவார்கள்?
3. நபியவர்களின் காலத்தில் மதீனாவில் காணப்பட்ட பள்ளிவாசல்கள் மூன்று தருக.
4. துயரத்திற்குள்ளாகியிருக்கும் மியன்மார் நாட்டு முஸ்லிம்கள் மியன்மாரின் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்?
5. ஆறு நோன்புகள் நோற்பதனால் கிடைக்கும் நன்மை யாது?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **12.09.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**முதலாம் இடம் :** H. பாதிமா ஜெஸீஹா, வைத்தியசாலை வீதி, மிச்நகர், ஏறாவூர்

**இரண்டாம் இடம் :** KS. ஆதில் அஹ்மத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03

**மூன்றாம் இடம் :** SA. பாதிமா ஸாபியா, புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. MI. இஸ்மத் நூரி, GJM. வீதி, புதிய காத்தான்குடி 03
2. MUF. ராஷிதா, புகையிரத குறுக்கு வீதி, மிச்நகர், ஏறாவூர்
3. MK. பாதிமா, பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03A
4. MM. பாதிமா அஸ்கா, காதியார் வீதி, ஏறாவூர் 06
5. MIF. மஹ்பூபா, ஓடாவியார் வீதி, ஏறாவூர்

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

1. ரய்யான்
2. இளைஞர்கள்
3. இஷாவின் பின்னிருந்து ஸுப்ஹ் வரை
4. ஸலவாத் பாடல் படித்தல்
5. விழித்தெழுந்து தொழுதல்


CGS
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணணி தகமைகளை CGS உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS இன் கணணி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420


ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.




COMPUTER ACCESSORIES




MOBILE PHONE & ACCESSORIES




MULTIMEDIA PLAYERS



Pay Less Get More
R-tel
COMMUNICATION

ஏ.ஆர்.எம் ஹாஜி கட்டிடம், பிரதான வீதி, ஏறாவூர்-03 (பழைய பொம்பே பசார் எதிரில்)

TEL: 065 22 400 33 MOB: 077 877 22 00 Email: rtelcomm@gmail.com